thiraimalar.com

# திரைமலர் .காம்

மாதம் இருமுறை இதழ் ஜனவரி 1-16-2022

இதழ்-1 மலர்-5



## தலைவலி சூர்யா குழப்பத்தில் சன் பிக்சர்ஸ்

## உயிர் காக்கும் சாரதா சங்கர் அடர் மூலிகை வனம்

# அஞ்சலி என்னை அவாய்ட் பண்றா? பீலிங்கில் பிளாக்பாண்டி

# நயன்தாரா

## உதவியாளர்களுக்கு கொண்டாட்டம்

## தயாரிப்பாளர்கள் திண்டாட்டம்



ஒருபடம் வெளிவருவதற்கு பல்வேறு இன்னல்கள் உள்ளது, இதில் பல்வேறு தேவையற்ற செலவு என்பதை ஒருசில இடங்களில் கட்டுப்படுத்த முடியாமல் தயாரிப்பாளர் திண்டாடுவதையும், ஒரு சில வீண் செலவுகளாலேயே பல படங்கள் முழுமை யடையாமல் பாதியில் கைவிடும் நிலையும் ஏற்பட்டுள்ளதை சினிமா வட்டாரத்தில் பார்க்க முடியும்.

இந்நிலை ஒருசில சமயம் நடிகர் நடிகைகள் மூலம் வீண் செலவுகள் ஏற்படும் தற்போது அந்த வகையில், தயாரிப் பாளர்கள் தலையில் மொட்டை போடும் நடிகையாக வலம் வருபவர் நயன்தாரா.

மலையாளத்தில் பிறந்து வளர்ந்து தமிழுக்கு நடிக்க வந்த நயன்தாரா ஆரம்பத்தில் லோக்கல் தொலைக்காட்சி ஒன்றில் நிகழ்ச்சி தொகுத்து வழங்கினார். பின்னர் ஐயா திரைப்படத்தின் மூலம் ஹீரோயினாக அறிமுகமானார். அதை யடுத்து சந்திரமுகி, வல்லவன், பில்லா, யாரடி நீ மோகினி , வில்லு, ஆதவன், பாஸ் என்கிற பாஸ்கரன், ராஜா ராணி, தனி ஒருவன், நானும் ரௌடி தான், விஸ்வாசம் உள்ளிட்ட பல திரைப் படங்களில் நடித்துள்ளார்.

ஆரம்பத்தில் பெரிதாக பிரபலமாக வில்லை என்றாலும் செகண்ட் இன் னிங்ஸ் அவரது வாழ்க்கையை

தலைகீழாக மாற்றியது. நானும் ரௌடி தான் படத்தில் நடித்த போது அப்படத்தின் இயக்குனர் விக்னேஷ் சிவனை காதலிக்க துவங்கினார். தற்போது இருவரும் லிவிங் டு கெதரில் வாழ்ந்து வருகிறார்கள்.

விக்னேஷ் சிவன் காதலுக்கு முன் பல்வேறு சர்ச்சையில் சிக்கியிருந்தாலும், நயன்தாராவுக்கு அதிர்ஷ்டம் கூரையை பிய்த்து அடிக்க துவங்கியுள்ளது, சினித்துறையில் லேடிய சூப்பர் ஸ்டார் பட்டத்தை கைப்பற்றியிருக்கிறார். பெயரும் புகழும் வந்ததற்கேற்ப நயன்தாராவால் தயாரிப்பாளர்கள் பெரும் அவதிக்குள்ளாவதாகவும் கூறப்படுகிறது.

சமீபத்தில் பிரபல தயாரிப்பாளர் கே ராஜன் நயன்தாரா குறித்த சர்ச்சையான கருத்தை வெளிப்படையாக கூறியுள்ளார்.

நயன்தாரா படப்பிடிப்பு வரும் போது 7 அசிஸ்டன்ட் உடன் தான் வருவாராம். அதில் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு ரூ.15 ஆயிரம். 50 நாட்கள் ஷூட்டிங் சென்றால் ரூ.52 லட்சம் தண்டம் அழவேண்டும். அது இல்லாமல் அந்த அம்மா ரூ. 6 கோடி சம்பளம் வாங்குறாங்க. இப்படியெல்லாம் பண்ணா தயாரிப்பாளர்கள் வாழ்வை இழந்து நடுத்தெருவுக்கு தான் வரவேண்டும் என காட்டமாக கூறியுள்ளார்.

கே.ராஜனை தொடர்ந்து நயன்தாராவை வைத்து படம் எடுத்த தயாரிப்பாளர்களும் அவரது கருத்தை ஆமோதித்துள்ளனர். நயன்தாராவின் இந்த வீண் செலவு பற்றி அவரிடம் எடுத்துக் கூற முடியாமல் பலர் திண்டாடி மொட்டையடிக்கும் அளவிற்கு வருகின்றனர்.

# விஜய்சேதுபதி in

## சிம்பு out



நயன்தாராவின் பிறந்தநாள் சமீபத்தில் கொண்டாடப்பட்டது. இதில் முக்கிய நண்பர்களை மட்டுமே நயன் அழைத்திருந்தார், இந்த முக்கிய நண்பர்கள் பட்டியலில் சிம்பு மிஸ் ஆகியுள்ளார்.

புதிதாக விஜய்சேதுபதி, நயன்தாராவின் நட்புவட்டாரத்தில் வந்துள்ளார், தற்போது கொண்டாடப்பட்ட பிறந்த நாள் விழாவில் சமந்தாவும் விஜய்சேதுபதியுமே முக்கிய விருந்தினராக கலந்து கொண்டனர். ஆடம்பரமாக கேக் வெட்டப்பட்டு கொண்டாடி, போட்டோ ஷூட் நடைபெற்றபோது, விஜய்சேதுபதி நைசாக நழுவ முயன்றார்.

ஆனால் நயன்தாராவும், விக்னேஷும் அவரை விடாமல் அருகில் நிறுத்தி போட்டோ எடுத்துக் கொண்டனர். அடுத்த படத்தில் விஜய்சேதுபதியும் நயன்தாராவும் இணைவார்கள் என்றும், இந்தப் படத்தில் சமந்தாவிற்கு முக்கிய வேடம் கிடைக்கும் என்றும் சினிமா வட்டாரங்களில் பேசப்படுகிறது.

# கிசு... கிசு.... கிசு.... கிசு.... கிசு...

சூப்பர் நடிகராக விளங்கும் பிரபல நடிகர் இன்னும் இரண்டு படங்களில் நடிக்க முடிவெடுத்துள்ளாராம், அதன்பின் திரைப்படத்துறையில் இருந்து விலகி இந்திய அளவில் உள்ள அரசில் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்க உள்ளதாக அவரது நட்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிக்காக ஓடிக்கொண்டிருக்கும் சின்னத்திரை நிகழ்ச்சியில் தற்போது சுவாரஸ்யமே இல்லாமல், இருப்பதால் அந்த நிகழ்ச்சி நடைபெறுகிறதா என்றே தெரியவில்லையாம், தொடர்ந்து நிகழ்ச்சியில் பல்வேறு தடங்கள், தடைகள் ஏற்பட்டவண்ணம் இருப்பதால், இந்த நிகழ்ச்சிக்கு இன்னும் சுருதி ஏற்றுவதற்கு மிகப்பெரிய பிரபலத்தை தொகுப்பாளராக நியமிக்க தொலைக்காட்சி நிர்வாகம் அழுத்தம் கொடுக்கிறதாம், ஆனால் இந்த நிகழ்ச்சியால் தனது இமேஜ் பாதிக்கும் என்று அந்த பிரபலம் நினைப்பதால் பிடி கொடுக்க மறுக்கிறதாம்.

மிகப்பெரிய நடிகர்களை வைத்து தோல்விப் படங்களை தந்த இயக்குநர் தற்போது வாய்ப்பு இல்லாமல் தவித்து வருகிறார். வருமானத்திற்கு வழியில்லாததால் ஏதேனும் தொழில்துறையில் இறங்கும் முடிவில், பிரபல தொழில் அறிஞர்களிடம் ஆலோசனை கேட்டு வருகிறாராம்.

ஷாப்பிங் மாலுடன் 3 திரையரங்குகளை கொண்ட புகழ் பெற்ற திரையரங்குகளில் 2 திரையரங்குகளை திருமணக்கூடமாகவோ, பார்ட்டி ஹாலாகவோ மாற்ற முடிவெடுத்துள்ளது, ஆனால் ஷாப்பிங் மாலுடன் திரையரங்கு இருப்பதால், எப்படி திருமண மண்டபமாக மாற்றுவது என்ற குழப்பத்தில் நிர்வாகம் தவிக்கிறதாம். கொரானாவில் ஏற்கனவே மிகுந்த வருமான இழப்பை சந்தித்த திரையரங்கில் கூட்டம் இல்லாமல் ஓடாத படத்தையெல்லாம் தற்போது திரையிடுகிறார்களாம்.

மிகப்பெரிய செல்போன் கம்பெணிக்கு ஆதரவாக இருந்த நடிகரின் குட்டு வருமானவரி சோதனையில் வெளியே வந்ததால், அந்த சீன நிறுவன செல்போன் கம்பெணியுடன் மட்டும்தான் அந்த பிரபல நடிகருக்கு தொடர்பு உள்ளதா? அல்லது மற்ற ஏதேனும் சீன நிறுவனத்துடன் தொடர்பு உள்ளதா என்ற விசாரணை நடத்தப்படுமா என்று பிரபல நடிகர் தரப்பினர் அச்சத்தில் உள்ளனராம்.

மருத்துவராக இருந்து சினிமாத்துறையில் சொந்தப்படம் எடுத்து சினிமாவில் ஜொலிக்க நினைத்த மருத்துவருக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி, சிகிச்சை பெற்று வரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவரது ரசிகர்க பேசிக்கொண்டிருக்கின்றனர்.



# மனோரமா நாகேஷ் ஜோடி

## கடைசிவரை இணையாத வைராக்கியம்

பழம் பெரும் நடிகர் நாகேஷ் மற்றும் ஆச்சி மனோரமா இருவரும் தங்களுடைய நகைச் சுவையால் ரசிகர்களின் மனதை கவர்ந்தவர்கள். தில்லானா மோகனாம்பாள், அன்பே வா உள்ளிட்ட பல திரைப் படங்களில் இவர்கள் இருவரும் இணைந்து நடித்துள்ளனர்.

இன்று வடிவேலு, கோவை சரளா ஜோடி எப்படியோ அப்படித்தான் அன்று நாகேஷ், மனோரமா ஜோடி மக்களிடையே பிரபலமாக இருந்தது. ஆனால் 1968 க்கு பிறகு சில காரணங்களால் இந்த ஜோடி திரையில் நடிக்காமல் பிரிந்தனர்.

இதற்கு ஒரு வலுவான காரணமும் இருந்தது. நடிகர் நாகேஷின் மனைவி ரெஜினாவின் சகோதரர் செல்வராஜ். அவர் ஒருநாள் மர்மமான முறையில் இறந்தார். இதற்கு காரணமாக ரெஜினா மற்றும் அவரது பெற்றோர்களை காவல்துறை கைது செய்தது.

செல்வராஜ் ஏற்கனவே குடிக்கு அடிமையாகி இருந்ததாகவும் அதனால் பணம் கேட்டு அடிக்கடி தங்களை துன்புறுத்தியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும் அவரை கொலை செய்யும் நோக்கத்துடன் நாங்கள் அடிக்க வில்லை என்றும் கோர்ட்டில் கூறினார். இந்த வழக்கிற்கு மனோரமாவும் ஒரு சாட்சியாக இருந்தார்.

பின்னர் போஸ்ட்மார்ட்டம் ரிப் போர்ட்டில் செல்வராஜ் அளவுக்கு அதிகமாக குடிபோதையில் இருந் தது உறுதியானது.

அதனால் அவருடைய மரணத் திற்கு ரெஜினாவும் அவரது பெற் றோர்களும் காரணமில்லை என்று விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் மன அழுத்தம் காரணமாக சிறிது நாட்களிலேயே நாகேஷின் மனைவி ரெஜினா மரணமடைந்தார்.

இந்தக் காரணத்தாலும், மனோரமா தங்களுக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வில்லை என்ற காரணத்தாலும் நாகேஷ் பின்னாளில் மனோரமா உடன் இணைந்து நடிப்பதை நிறுத்தி விட்டார். அதன் பிறகு இருவரும் ஒரே படத்தில் நடித்தாலும் ஜோடியாக நடிக்காமல் இருந்தனர்.

மனோரமா, நாகேஷ் குடும்பத்திற்கு எதிராக என்ன சாட்சி கூறினார் என்பதை பற்றி அவர் இதுவரை வெளியில் சொல்லவில்லை. மேலும் அப்போது முதல்வராக இருந்த எம்ஜிஆர் அவர் களால் இந்த பிரச்சனை சுமூகமாக தீர்த்து வைக் கப்பட்டது.



# தலைவலி சூர்யா

# குழப்பத்தில் சன் பிக்சர்ஸ்



சூர்யா நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த ஜெய்பீம் என்ற இந்திப்படப் பெயரைக் கொண்ட ஓவர் டோஸ் திரைப்படத்தால், திரையுலகில் பல்வேறு தலைவலிகள் உருவாகியுள்ளது. இந்த படத்தில் பல்வேறு காட்சிகளை இட்டுக் கட்டி பொய்யான கேரக்டர்களை சேர்த்து எடுக்கப்பட்டது ஒருபக்கம் இருந்தாலும், தொடர்ந்து கதைக்காக இந்து சமயத்தையும், ஒருசில குறிப்பிட்ட ஜாதியையும் குறைகூறி படம் எடுத்து அதில் கொள்ளை லாபம் சம்பாதிப்பதை தொழிலாக வைத்து செயல்படும் சூர்யாவை வைத்து அடுத்த படத்தை வெளியிடவிருக்கும் சன் பிக்சர்ஸ்க்கு தற்போது தலைவலி ஆரம்பமாகியுள்ளது.

ஏற்கெனவே அறக்கட்டளை, நிதி, என்ற போர்வையில் சரியான கணக்கு காட்டாததால் அவரின் அறக்கட்டளைக்கு மத்திய அரசு சார்பில் பல்வேறு சிக்கல் உள்ளது.

இந்த சிக்கலை மத்திய அரசு மூலம் தீர்வு காண எவ்வளவோ முயன்றும், அறக்கட்டளைப் பிரச்சனையில் தீர்வு காணப்படாமல், அறக்கட்டளை சொத்துக்கள் முடங்கும் அபாயத்தில் உள்ளதால், தொடர்ந்து மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சம்பந்தப்பட்டவர்களுடன் நெருக்கமாக உள்ளவர்கள் என அனைவரையும் படத்தின் வாயிலாக எதிர்க்க துவங்கியுள்ளது சூர்யா குடும்பம்.

இல்லாத கதையை உருட்டு உருட்டி, அதை குறிப்பிட்ட ஜாதிக்கு சாதகமாகவும், சில ஜாதி, மதத்தினருக்கு எதிராகவும் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல கதைக் கரு அமைத்து, பல்வேறு சிக்கலில் தயாரிப்பாளரையும், இயக்குநரையும் மாட்டிவிடுவது சூர்யாவின் வழக்கம்.

அந்த வகையில் ஜெய்பீம் படத்தில் சூர்யா உருட்டியஉருட்டுக்கள் அத்தனையும் பொய் உருட்டுக்கள், இந்த படத்தில் உயர் ஜாதியினரால் கதாநாயகன் கொடுமைப்படுத்தி கொலை செய்வதைப் போன்று கதை அமைந்திருந்தது. ஆனால் உண்மையில் அந்தோணி சாமி

என்ற சிறுபான்மைபிரிவைச் சேர்ந்தவரால் நடைபெற்ற உண்மை சம்பவத்தை, உல்டாவாக உருட்டு உருட்டி உயர்ஜாதியினர் கொடுமை என்ற கண்ணோட்டத்தில் படம் தயாரிக்கப்பட்டது.

மத்திய அரசுடன் கூட்டணியில் உள்ளபாமாகாவிற்கு அவப்பெயரை உண்டு பண்ணும் நோக்கத்தில், இந்த சம்பவத்திற்கு தொடர்பே இல்லாத வன்னியர் சங்கத்தை வம்பிற்கு இழுத்து, படத்தின் காட்சியில் குரு என்ற பெரையும், வன்னியர்களின் முத்திரையான கலச பானையையும் காட்டி,வன்னியர்களை மிகவும் கேவலமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஜெய்பீம்படத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், இதுகுறித்து சூரியாவிடம் விளக்கம் கேட்டு கடிதம் ஒன்றை அனுப்பினார்.

மெத்த படித்த மேதாவி போல சூர்யா பதில் கடிதம் எழுதியுள்ளார். இதில், அன்புமணி ராமதாசுக்கும், பாமாகவிற்கு சில அறிவுரை வழங்கும் தொனியும் சூரியாவின் பதில் கடிதத்தில் இருந்தது.

அதுமட்டுமல்லாமல், பதில் அளித்ததோடு நின்று இருந்தால் கூட பிரச்சனை பெரிதாகியிருக்காது, ஆனால் திருமாவை பாராட்டி சூர்யா கடிதம் எழுதியது, வன்னிய மக்களிடையே பெருங் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவற்றை எல்லாம் மனதில் வைத்து தான் பாமக இந்த பிரச்சனையை பெரிதாக்கியது என்கிறார்கள். பிரச்சனையின் அடுத்தகட்டமாக சூர்யா படங்களை திரையரங்குகளில் வெளியிடக்கூடாது என பாமகவினர் மிரட்ட ஆரம்பித்துள்ளனர்.

சூர்யா படத்தை திரையிட்டால்? சேலம் மட்டும் அல்லாமல் வட மாவட்டங்களில் உள்ள அனைத்து திரையரங்குகளையும் தொடர்பு கொண்டு இனி சூர்யா படங்களை திரையிடக்கூடாது, வன்னியர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று பாமக மாவட்ட தலைவர்கள், முக்கிய நிர்வாகிகள் தங்கள் லெட்டர் பேடில் கடிதம் கொடுத்து வந்தனர்.

கடிதத்தில் எழுதப்பட்டுள்ள வார்த்தைகளை மென்மையாக இருந்தாலும் சூர்யா படத்தை திரையிட்டால்? என்கிற மிரட்டல் தொனியும் அதில் இருப்பதாக கூறுகிறார்கள். இந்த கடிதத்தை எந்த ஒரு திரையரங்க உரிமையாளரும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை என்கிறார்கள்.

இந்த நிலையில் நடிகர் சூர்யா நடிப்பில் சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் எதற்கும் துணிந்தவன் படத்தின் விளம்பரத்தை வெளியிட்டு படம் பிப்ரவரியில் வெளியாக உள்ளதாக அறிவிக்கப் பட்டது. இப்போது தான் பிரச்சனையின் தீவிரம் சூர்யா தரப்பிற்கு தெரியவந்துள்ளது. படத்திற்கான வெளியீட்டு தேதியை அறிவித்த பிறகு அதற்கான திரையரங்குகள் புக்கிங்கை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தொடங்கியதாக கூறுகிறார்கள்.

ஆனால் வட மாவட்டங்களில் சூர்யாவின் படத்தை திரையிட திரையரங்க உரிமையாளர்கள் யோசிப்பது அப்போது தான் தெரியவந்தது. சூர்யா அப்செட் வன்னியர் சமுதாய இளைஞர்கள் ஒட்டு மொத்தமாக சூர்யா மீது கோபத்தில் உள்ளனர். இந்த நிலையில் பிரச்சனை தீருவதற்கு முன்பாக அவரது படத்தை திரையிடும் விவகாரத்தில் எந்த முடிவும் எடுக்க இயலாது என்று திரையரங்க உரிமையாளர்கள் சன் பிக்சர்ஸ் நிறுவனத்திடம் கூறியதாக சொல்கிறார்கள்.

இந்த தகவல் சூர்யாவிற்கு பாஸ் செய்யப்பட்ட நிலையில், திரையுலகில் உள்ள வன்னியர் சமூகத்தை சேர்ந்த சூர்யாவின் நல விரும்பிகளும் இந்த விவகாரத்தில் பாமகவை, அன்புமணியை எதிர்ப்பது சரியில்லை, அவர்களோடு சமாதானம் செய்து கொள்வது தான் நல்லது என்றே அறிவுரை கூறியுள்ளனர்.

வன்னியர் கூட்டமைப்பின் எதிர்ப்பு நிச்சயமாக பாமக மட்டும் அல்ல வன்னியர் கூட்டமைப்பின் நிறுவனர் சி.என்.ராமமூர்த்தி கூட ஜெய்பீம் படத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அக்கின குண்டத்தை அவமதித்ததை ஏற்கவே முடியாது என்றும் சூர்யா தரப்பு மன்னிப்பு கேட்டே ஆக வேண்டும் என்றும் வன்னியர் கூட்டமைப்பு நிர்வாகிகள் எச்சரித்து வருகின்றனர்.

எனவே இதனை பாமகவுடனான மோதலாக மட்டுமே பார்க்க முடியாது என்று சூர்யாவிடம் அவருக்கு நெருக்கமான வன்னியர் சமூக நண்பர்கள் எடுத்துக்கூறியுள்ளனர். அத்தோடு பகிரங்கமாக சூர்யாவிற்கு மிரட்டல் விடுத்த பாமக மாவட்டச் செயலாளரை தற்போது வரை போலீசார் கைது செய்யவில்லை. இதன் மூலமே இந்த விவகாரத்தின் திமுக அரசின் நிலைப்பாட்டை தெரிந்து கொள்ள இயலும். மேலும் வழக்கமாக பாமகவுடன் மல்லுகட்டும் திமுக எம்பி செந்தில் கூட ஜெய்பீம் விவகாரத்தில் அமைதி காக்கிறார்.

படம் நடித்தோமா காசு பாத்தோமா என்று இல்லாமல், இல்லாத கதையை இட்டுக்கட்டி மக்களிடம் அனுதாப அலையை உருவாக்கி, அரசியல் லாபம், பொருளாதார லாபம் அடைய விரும்பும் முட்டாள் நடிகர்களுக்கு, ஜெய்பீம் ஒரு எடுத்துக்காட்டு.

ஆனால் இதில் சம்பந்தமே இல்லாத சன் பிக்சர்ஸ் நிறுவனத்திற்கு சூர்யாவால் லாபம் கிடைக்குமா நஷ்டம் ஏற்படுமா என்பது மில்லியன் டாலர் கேள்வி. இனி இதுபோன்ற தரம் தாழ்ந்த நடிகர்களை வைத்து படம் எடுக்கும்முன் யோசிப்பது அவசியம்.






# பெயரை கெடுத்த சக போட்டியாளர்கள் விஜயலட்சுமி குமுறல்....

ஜீ தமிழ் தொலைக்காட்சியில் வெளியான நிகழ்ச்சி சர்வைவர். ஜான்சிபார் எனப்படும் டான் சானியா தீவு ஒன்றில் போட்டியாளர்கள் தங்கி யிருக்க அங்கிருந்து ஒளிபரப்பப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை நடிகர் அர்ஜுன் தொகுத்து வழங்கி இருந்தார். மேலும், முதலில் இந்த நிகழ்ச்சியில் 16 பேர்கள் கலந்து கொண்டு காடர்கள், வேடர்கள் என்று இரண்டு அணிகளாக பிரிக்கப்பட்டு பல சவால்கள் கொடுக்கப்பட்டது.

கடுமையான பல போட்டிகள், சவால்கள் என்று நிகழ்ச்சி விறுவிறுப்பாக சென்றது. பின் அனைவரும் எதிர்பார்த்த 90 நாட்கள் சர்வைவர் முடிவில் விஜயலட்சுமி டைட்டிலை பெற்றது மிக பெரிய சாதனை. இதற்காக இவருக்கு ஒரு கோடி ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது.

மேலும், சர்வைவர் நிகழ்ச்சிக்கு பிறகு நடிகை விஜயலட்சுமி சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள புது வீட்டில் குடியேறினார். அதற்கான புகைப்படங்களை ஷோசியல் மீடியாவில் பதிவிட்டு இருந்தார். இதற்கு பலரும் வாழ்த்து கூறி கமெண்ட் போட்டு இருந்தார்கள். சமீபத்தில் விஜயலட்சுமி பேட்டி ஒன்று அளித்தார்.

அதில், "நாங்கள் புது வீட்டில் குடியேறி இருக்கி றோம். இதற்கு பலரும் வீடு புதுசா! ஒரு கோடி ரூபாய் பரிசு கலக்குறீங்க என்றெல்லாம் கமென்ட் போட்டு இருந்தார்கள்.

அந்த பணம் இன்னும் என் கைக்கு வந்து சேரவே இல்லை. அந்த காசில் தான் வீடு வாங்கி இருக்கேன் என்று ஏதாவது கிளப்பி விடாதீர்கள். ஒரு கோடி ரூபாய் பரிசு பணம் தன் கைக்கு வந்து சேர சில மாதங்கள் ஆகும். சர்வைவர் நிகழ்ச்சியில் எங்களுடன் அந்த தீவில் க்ரூவில் இருந்து சிலர் எங்களுடன் தொடர்பில் இருந்தார்கள். எங்களுக்கு ஏதாவது அவசர தேவை என்றால் அவர்கள் மூலம் தான் தொடர்பு கொள்வோம்.

ஆனால், நான் யாரையும், யாரு மூலமாகவும் போன் செய்து பேசவில்லை. எங்க, எப்படி கேட்டாலும் இதை நான் அழுத்தி சொல்வேன். ஆனால், நிகழ்ச்சியில் சில போட்டியாளர்கள் மணிக்கணக்கில் அந்த க்ரூவ் உடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அதோடு விளையாடிக் கொண்டிருக்கும்போது நடுவில் என்னைப்பற்றி நெகட்டிவான கமாண்ட் வந்து கொண்டிருந்தது. இது சிலர் திட்டமிட்டு செய்த வேலை என்று தான் நான் சொல்வேன்.

ஒரு கட்டத்துக்குப் பிறகு என்னைப் பத்தி நிறைய நெகட்டிவ் கமெண்ட் வந்தது எனக்கு அதிர்ச்சியாகி விட்டது. சில போட்டியாளர்கள் பணம் கொடுத்து எனக்கு எதிராக இதை செய்ய வைத்தார்கள் என்று எனக்கு தெரிய வந்தது என்று கூறியிருக்கிறார். அந்த போட்டியாளர் யார்? யார் இவருக்கு எதிராக பண்ணது? என்பதை விஜயலட்சுமி கூறவில்லை. இதுகுறித்து தற்போது ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகிறார்கள்.

# Cinema

# ஆபாச வியாபாரமா...?

சமீபத்தில் பிரபல திரைப்பட இயக்குனரான எனது நண்பர் ஒருவர் என்னை சந்திக்க வந்திருந்தார் அவருடன் நெடுநேரம் பல விஷயங்களை பற்றி பேசி விட்டு கடைசியில் இப்போது வெளிவருகின்ற திரைப்படங்கள் எவற்றிலும் கதைகளே இருப்பது இல்லையே கதைகள் இல்லாமல் எப்படி உங்களால் படம் எடுக்க முடிகிறது என்று கேட்டேன் இப்படி நான் கேட்டதும் சிரித்து பிரகாசமாக இருந்த அவர் முகம் கருத்து விட்டது ஐயோ பாவம் நாம் கேட்க கூடாத கேள்வியை கேட்டு அவர் மனதை புண்படுத்தி விட்டோமோ என்ற வருத்தம் எனக்கு ஏற்பட்டது

ஆனால் அவர் சில வினாடிகளில் சகஜநிலை க்கு வந்து விட்டார் மிட்டாய் கடையில் உட்கார்ந்து கொண்டு ஈ மொய்கிறதே என்று வருத்தப்படுபவனை போல இன்றைய இயக்கு னர்களின் நிலை இருக்கிறது நாங்கள் பணத்திற்காகதான் படம் எடுக்கிறோம் என்றாலும் அந்த தொழிலில் முன்பெல்லாம் எங்களது திறமையை அறிவை அனுபவத்தை காட்ட முடிந்தது அதனால் மன திருப்தியும் சந்தோசமும் நிறையவே எங்களிடம் இருந்தது ஆனால் இப்போது இயக்குனர்களின் திறமைக்கோ அனுபவத்திற்கோ மதிப்பு கிடையாது

தயாரிப்பாளர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற படியும் நடிகர்களின் இமேஜிக்கு தக்கப்படியும் தான் படம் எடுக்க வேண்டிய சூழல் உள்ளது இதில் கதை லாஜிக் அது இதுவென பேசிக்கொண்டிருந்தால் ஓரம் கட்டிவிடுவார்கள் பிறகு பிழைப்பை நடத்துவது பெரும்பாடாகிவிடும் என்று வருத்தத்தோடு சொன் னார் அதன் பிறகு தான் அவர் முகம் கருத்தது என் கேள்வியை கேட்டு அல்ல தன் நிலையை உணர்ந்து என்பது புரிந்தது

திரைப்படம் என்பது எவ்வளவு சக்திவாய்ந்த மக்கள் ஊடகம் என்பது நமக்கு தெரியும் பக்க பக்கமாக எழுதி குவித்தாலும் எதோ ஒரு சிலர்தான் படிப்பார்கள் சினிமாவில் ஒரு காட்சியில் அல்லது ஒரு சிறிய வசனத்தில் சொல்ல வேண்டிய கருத்தை சொல்லி விட்டால் அது ஒட்டு மொத்த மக்கள் மத்தியில் மிக சுலபமாக சென்று விடும் அப்படி பட்ட ஊடகத்தை கையில் எடுத்துக் கொண்டால் ஒரு நாட்டின் அரசியல் தலை எழுத்தையே மாற்றி அமைத்து விடலாம் என்பதற்கு தமிழ் நாடு நல்ல உதாரணம் அண்ணாதுரை துவங்கி இன்றைய விஜயகாந்த் வரையிலும் திரைப்பட ஊடகத்தால் உருவான அரசியல் பார்மூலாக்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது



அன்றைய திரைப்படங்கள் அரசியலை பற்றி மட்டுமே பேசியிருந்தால் முழு வெற்றியை அடைந்திருக்காது காரணம் நாட்டில் உள்ள சிலர் தவிர பலர் அரசியலை விரும்புவது இல்லை அவரவரும் அவரவர்க்கு தக்கப்படி விஷயங்களை தேடும் மனப்பாங்கும் ரசனையும் உண்டு அதற்கு ஏற்ற வாறே திரைப்பட பிரம்மாக்கள் பல்வேறுப்பட்ட கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு வந்தார்கள் அதனால் தான் அக்கால திரைப்படங்கள் எழுதப்படாத இதிகாசங்களாக இன்றும் பலர் கருத்துகிறார்கள்

ஆனால் தற்போதைய திரைப்படங்களில் நல்ல விஷயங்களை பூதக்கண்ணாடிக் கொண்டு தான் தேட வேண்டி உள்ளது சிலர் பாகவதர் காலத்து திரைப்படங்கள் சொன்னக் கருத்துக்கள் வேறு சிவாஜி காலத்து திரைப்படங்கள் சொன்னக் கருத்துக்கள் வேறு இரண்டிற்கும் பெரிய வேறுபாடு உண்டு வளர்ச்சியும் உண்டு காலம் தோறும் சூழலுக்கு ஏற்றவாறு மாற வேண்டிய நிலை சினிமாவிற்கு உண்டு

நான் சிவாஜி காலத்தில் இருந்தது போல் தான் இப்போதும் இருப்பேன் என்று சினிமா பிடிவாதம் பிடித்தால் அது புறப்பட்ட இடத்திலேயே நிற்க வேண்டியது தான் ஒருகாலத்தில் பாடல்கள் கதையை நகர்த்தியது என்றால் மற்றொரு காலத்தில் கதையும் வசனமும் அந்த வேலையை செய்தது இப்போது நவீன தொழில்நுட்பம் வந்துவிட்டதனால் மாறியே ஆகவேண்டிய நிலை சினிமாவின் கட்டாயமாகி விட்டது

மேலும் அன்று சில திரைப்பட நிறுவனங்கள் தான் இருந்தன இன்று அப்படி அல்ல பல கோணத்தில் போட்டிகள் உதயமாகி விட்டன அதற்கு ஈடு கொடுக்கும் போது சினிமாவின் பழைய நடைமுறை மாறித்தான் ஆகும் என்று சொல்கிறார்கள்

இந்த கருத்தை யாரும் மறுக்க இயலாது பழைய விஷயங்களையே மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டிருந்தால் கேட்பவனுக்கு சலிப்பு தட்டிவிடும் எதிலும் மாற்றம் என்பது அவசியமானது தவிர்க்க முடியாதது ஆனால்

**இயக்குனர்களின் திறமைக்கோ அனுபவத்திற்கோ மதிப்பு கிடையாது தயாரிப்பாளர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற படியும் நடிகர்களின் இமேஜிக்கு தக்கப்படியும் தான் படம் எடுக்க வேண்டிய சூழல் உள்ளது இதில் கதை லாஜிக் அது இதுவென பேசிக்கொண்டிருந்தால் ஓரம் கட்டிவிடுவார்கள் பிறகு பிழைப்பை நடத்துவது பெரும்பாடாகிவிடும்**

இங்கே பேசுகின்ற விஷயம் சினிமாவில் கதை இல்லையே அது ஏன் என்பது தான்

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது தவறல்ல காட்சி அமைப்பில் ஒலி ஒளி அமைப்பில் டிஜிட்டல் முறையை கொண்டு வரலாம் அதுவும் தவறல்ல ஆனால் கதையே இல்லாமல் படம் எடுப்பதில் யாருக்கு என்ன லாபம் என்பது தான் நமது கேள்வி

ஒருவன் சினிமா பார்க்க இரண்டரை மணி நேரம் தியேட்டருக்கு வருகிறான் அவனை அந்த நேரத்தில் சந்தோஷப்படுத்தி அனுப்புவது தான் கலைஞர்களின் நோக்கமே தவிர உபதேசம் செய்வது அல்ல என்று சிலர் விளக்கம் தருகிறார்கள் இது சரிதானா நியாயம் தானா என்று அவர்கள் மனசாட்சி கேட்காமல் இருந்தால் சரி

எனது இயக்குனர் நண்பர் சொன்னார் நல்ல கதையை எழுதி தயாரிப்பாளரிடமோ பெரிய நடிகர்களிடமோ கொண்டு காட்டினால் அவர்கள் கேட்பது ஒன்றே ஒன்று தான் இதில் கதை இருக்கிறது சரி காசுப் பண்ண வழி இருக்கிறதா என்கிறார்கள்

நடிகர்களோ கதையில் தனது முத்திரையை பதித்தே ஆக



வேண்டும் என்று பிடிவாதம் செய்கிறார்கள் இதனால் கலைக்காக கதை எழுதப்போய் பணத்திற்காகவும் நடிகர்களின் தனி முத்திரைக்காகவும் கதையின் கழுத்தை அறுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது




சிவாஜி கணேசன் போன்ற நடிகர்கள் கதைக்காக தங்களை மாற்றிக் கொள்வார்கள் தற்கால நடிகர்களோ தங்களுக்காக கதையை மற்ற சொல்கிறார்கள் பிறகு எப்படி தரமான படத்தை தரமுடியும் என்று கேட்டார் அதிலும் நியாயம் இருக்கிறதல்லவா

தமிழ் திரைப்பட உலகில் முதல் தர வரிசையில் இருக்கும் நடிகர் ஒருவர் சில காலத்திற்கு முன்பு எடுத்த திரைப்படம் ஒன்றில் தன்னை மிகைப்படுத்தி காட்டிக் கொள்ளவும் தாம்தான் எல்லோரையும் விட மேலானவன் வித்தியாசமானவன் என்று விளம்பரம் படுத்திக் கொள்ளவும் தேவையற்ற பல பாத்திரங்களை உருவாக்கி நடித்திருப்பார் அந்த படம் எடுப்பதற்கு ஆன செலவை விட விளம்பரப்படுத்த ஆன செலவு நிச்சயம் அதிகமாக இருக்கும் கடைசியில் அந்த படம் மக்களுக்கு சொன்ன செய்தி என்ன வென்றே இதுவரை யாருக்கும் புரிய வில்லை கடைசியில் பல கோடி செலவில் உருவான படம் வந்த வேகத்தில் சில லாபத்தை கொடுத்து விட்டு பெட்டியில் தூங்குகிறது

திரைப்பட நடிகர்கள் நடிகைகள் நடிப்பது சம்பளம் வாங்குவது புகழின் உச்சிக்கு ஏறி கொட்டம் அடிப்பதற்கு அல்ல அவர்கள் தயாரிப்பாளர்களிடம் இருந்து சம்பளம் வாங்கினாலும் அந்த பணம் கணிப்பொறியாளன் முதல் மூட்டை தூக்கும் தொழிலாளி வரை கொடுக்கும் பணம் என்பதை மறந்து விடக்கூடாது

பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு எத்தகைய சமூக பொறுப்பு உள்ளதோ அதே அளவு சமூக பொறுப்பு கலைஞர்களுக்கு உண்டு அவர்கள் தங்களது நடிப்பால் இசையால் புலமையால் மக்களை செம்மை படுத்த பாடுபட வேண்டுமே தவிர கீழ்த்தரமான உணர்ச்சிகளை தூண்டிவிட்டு குளிர்காய நினைக்க கூடாது அப்படி நினைப்பவர்கள் நிச்சயம் சமூக விரோதிகளே ஆவார்கள்

பாசமலர், பாகப்பிரிவினை, படிக்காத மேதை போன்ற படங்கள் இன்றுவரை கூட கொட்டகைகளில் ஓடி கணிசமான வருவாயை ஈட்டி தருகிறது என்றால் அது சிவாஜி என்ற மாபெரும் நடிகருக்காக மட்டும் அல்ல நல்ல அழுத்தமுள்ள அர்த்தமுள்ள கதைக்காகவும் தான் என்பதை உணர வேண்டும் வெறும் நடனம் சண்டை கவர்ச்சி என்று நேற்று காலையில் எடுக்கப்பட்ட படம் இன்று மாலையே பெட்டியில் குறட்டை விடுவது கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாததே என்பதையும் உணர வேண்டும்

மக்கள் கவர்ச்சியை விரும்புகிறார்கள் அதனால் தான் இத்தகைய படங்களை எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்று சில திரைத்துறையினர் பேசுகிறார்கள் இது தவறு என்று அவர்களுக்கே தெரியும் எந்த சினிமா ரசிகனும் அரைகுறை ஆடையோடு படம் எடுங்கள் என்று எந்த தயாரிப்பாளருக்கும் இயக்குனருக்கும் கடிதம் போடுவது கிடையாது இவர்களாகவே அப்படி முடிவு செய்து திட்டமிட்டு மக்களின் ரசனையை பாழ் படுத்துகிறார்கள்

அந்த கால சினிமாவில் கவர்ச்சியும் ஆபாசமும் இல்லவே இல்லை என்று நான் சொல்ல வரவில்லை இருந்தது ஆனால் அது கதை என்ற உடம்பில் முளைத்த உறுப்பாக இருந்ததே தவிர வீங்கிய கட்டியாக இருக்க வில்லை பழங்கால சிற்ப கலையிலும் ஓவியங்களிலும் பாலுணர்வை தூண்டக் கூடிய வடிவமைப்புகள் இருந்தன ஆனால் அவைகள் ரசிக்க கூடியதாக ரசிப்பவனின் கலை உணர்ச்சியை மேம்படுத்த கூடியதாக இருந்ததே தவிர கண்களை கூசி அருவறுத்து மூடக்கூடிய்தாக இருந்ததில்லை

ஜனரஞ்சக கலை என்று வரும்போது அதில் நாலாவித விஷயங்கள் கலந்திருப்பது இயல்பு அதை குறை சொல்வது கலைஞனின் கற்பனை திறனை தடை போடுவது போலாகும் கற்பனை சுதந்திரம் என்பதற்க்காக எவருக்கும் தங்களது வக்ர புத்தியை விளம்பரப் படுத்திக் கொள்ள உரிமை கிடையாது ஒண்டவந்த பிடாரி ஊர் பிடாரியையும் கெடுத்தது போல இவர்களது வக்ர எண்ணம் மக்களையும் கெடுத்து விடும் இது முற்றிலும் தர்ம விரோதமாகும்

எனவே திரைப்பட துறையினர் நல்ல கதை உள்ள படைப்புகளை மக்களுக்கு தரவேண்டும் தற்கால இந்திய மக்கள் கொடுமையை கண்டு மௌனமாக போகும் நிலையில் இல்லை இன்று ஊழலின் நெஞ்சுக்கு நேராக நீட்டப்பட்டிருக்கும் ஈட்டி நாளை காலையில் ஆபாச வியாபாரிகளான திரைதுரையினரை நோக்கி நீட்டப்படலாம் வெட்டும் வாள் வருவதற்கு முன்பே வெட்டப்படும் சூழலை தடுத்து கொள்பவனே புத்திசாலி.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும்
https://www.ujiladevi.in
**போன்: 09442426434**




# காதலிக்கு சில கடிதம்

பெண்ணே என்னை நெருங்கிவிடாதே
ஏன் என்றால்
எனக்குள் எரியும் தீபத்தை
உன் பார்வை நெருப்பாக்கிவிடும்

❖❖❖

உன்னைக் காண்பதற்கு முன்
குளிர்ந்திருந்த என் மனம்
உன்னைக் கண்டபின்
கொழுந்துவிட்டெரிகிறதே

❖❖❖

அடியே என் மனதில்
தீபத்தைத்தான் ஏற்றச் சொன்னேன்
ஆனால் நீயோ...
என்னையே பொசுக்கிவிட்டாயே

❖❖❖

கலங்கப்பட்ட கடலும்
இன்று புனிதமடைந்தது
என்னவளின்
பாதம் பட்டதும்

❖❖❖

ஆயிரம் பெண்ணைப் பார்த்தேன்
சலனப்படாத என் எண்ணம்
இன்று அவள் கண்ணைப் பார்த்ததும்
சலனப்பட்டுவிட்டது

❖❖❖

மயங்கினேன்
அவளின் சிரிப்பொலியில்
மவுனமானேன்
அவள் மார்பில் தொங்கிய தாலியில்

❖❖❖

காதலுக்கு கண் இல்லை என்று கூறினாய்
சிரித்தேன்
நீ அவனுடன் செல்லும் போது
அதை உணர்ந்தேன்

❖❖❖




# கீதா சமையல்

சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம், கீதா சமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்




ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்

பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்

YouTube LIKE & SHARE

# இயற்கையாக அழகை பாதுகாக்கும் வழிமுறைகள்

அலைபாயும் கூந்தல், பளபளப்பான தேகம், மாசுமருவற்ற சருமம், முத்தான பற்கள், காந்தக் கண்கள், செழிப்பான கன்னம், பவழ இதழ்கள், சொக்க வைக்கும் வனப்பு. இப்படித்தோற்றம் அளிக்க யாருக்குத்தான் விருப்பம் இருக்காது?

### ஆரோக்கியம்

உடலின் ஆரோக்கியத்தைப் பொறுத்தே அதன் அழகு வெளிப்படுகிறது. ஆகவே வாய்க்குள் போகும் உணவிற்கு ருசியை விட அதன் பயனிற்கு முக்கியத்துவம் தர வேண்டும். அதிக இனிப்பு மசாலா வகைகளையும் ஐஸ் க்ரீம் போன்ற வைகளையும் எண்ணையில் பொறித்தவைகளையும் நீக்குதல் நல்லது.

### இயற்கை தரும் க்ளென்சர்ஸ்

பால் நல்ல க்ளென்சர் என்பதால் தான் கிளியோபாட்ரா கழுதைப்பாலில் குளித்துப் பேரழகியாய் இருந்திருக்கிறார் போலும்! குளிர்ந்தபாலில் பஞ்சினைத் தோய்த்து முகம் துடைப்பது சிறந்தது. மேக்கப் போடு முன்பு எப்போதும் முகத்தை க்ளென்சிங் இப்படிச் செய்யவேண்டும்.

தேங்காயுடைத்ததும் கிடைக்கும் இளநீரும் சிறந்த க்ளென்சிங் மில்க் வீணாக்காமல் முகத்திற்குத் தடவிக் கொள்ளலாம்.

வறண்ட சருமத்திற்கு இயற்கையான க்ளென்சர் தேனில் பால் சேர்த்து பயன்படுத்துவது என்றால் எண்ணைப் பசை சருமத்தினர் எலுமிச்சை சாற்றினில் சில துளிகள் பால் சேர்த்துக் கலந்து அதைப் பஞ்சினால் தொட்டு சருமத்தை துடைத்து எடுக்கலாம்.

### பளிச் முகத்துக்கு

பாதாம்பருப்பு சருமத்திற்கு ஒரு அற்புதப் பொருள் எனலாம். 5 பாதாம்பருப்பினை ஊற வைத்து பால் சேர்த்து விழு தாய் அரைத்து தேன் சில துளி சேர்த்து முகத்தில் பூசுங்கள். 20 நிமிடம் ஊறிய பின் முகத்தைக் கழுவுங்கள்.

### முகப் பொலிவுக்கு

வெள்ளரிக்காய் சாற்றில் முல்தானிமட்டி மற்றும் பால் சேர்த்துக் கலந்து முகத்தில் பூசி பிறகுக் கழுவினால் வெய்யிலினால் கருத்த முகம் பொலிவு பெற்று விடும்.

### கருப்பு திட்டுகள் மறைய

மூக்கு கன்னங்களில் கருப்பு திட்டாய் இருக்கிறதா? சந்தனம் ஜாதிக்காய் வேப்பங்கொழுந்து ஆகியவற்றை நீரினில் நைசாக அரைத்து பற்று மாதிரி போடுங்கள்..மங்கு படர்ந்த பகுதிகள் மளாரென மறைந்துபோகும்!

### கருவளையம் மறைய

கண்ணுக்கு கீழேயும் கருப்பு வளையம் நமக்கு வெறுப்பான விஷயம் தான். அதற்கு வெள்ளரி விதை பொடியுடன் தயிர் சேர்த்து பேஸ்ட் போலக் குழைத்துத் தடவி வந்தால் ஒரே மாதத்தில் கறுமை காணாமல் போகும்.

## சருமம் கருமை மாற

முட்டைகோஸின் வெளிப்புற இலைகளை எடுத்து மிக்ஸியிலிட்டு சாறு பிழிந்து அத்துடன் ஒரு ஸ்பூன் ஈஸ்ட், ஒரு ஸ்பூன் தேன் கலந்து முகம், கழுத்து கைகளில் பூசி வர சூரிய ஒளியால் பாதிக்கப்பட்ட சருமம் கருமை நிறம் மாறி சிவந்து விடும்.

## கழுத்தைப் பராமரிக்க

நம் முகத்தைத் தாங்கும் கழுத்தையும் நாம் கவனிக்கணும். ஒரு ஸ்பூன் வெங்கயச்சாறு சிறிது ரோஸ்வாட்டர் இரண்டு சொட்டு ஆலிவ் ஆயில் சிறிது பயற்ற மாவு கலந்து கழுத்திற்கு பூச வேண்டும். பத்து நிமிஷம் கழித்து கீழிருந்து தாடை நோக்கி மெதுவாய் மசாஜ் செய்ய 'டபுள் சின் 'நாளடைவில் 'சூப்பர் சின்' ஆகிவிடும்!

## முகத்தில் புதுப்பொலிவுக்கு

தர்பூசணி பழச்சாறு பயற்றமாவு கலவை முகத்தில் பூசப்பட்டு வந்தாலும் புதுப்பொலிவு கிடைக்கும்.

பப்பாளிப்பழமும் அப்படியே முகத்தில் பூச உகந்தது இயற்கையான ஸ்க்ரப் இது!

## சிவந்த இதழ்களுக்கு

சின்ன துண்டு பீட்ரூட்டை உதட்டில் அடிக்கடி அழுத்தித் தேய்த்து வர செவ்வாய் (திங்களுக்குப் பின் வருவதல்ல சிவந்த அழகான இதழ்கள்) வரும் நிச்சயம்!



### நகங்கள் பொலிவு பெற

பாதாம் எண்ணை சில சொட்டு நகத்தில் தேய்த்து வர ஆரோக்கியமாய் நகங்கள் வளரும். பேரிச்சம்பழம் கலந்த பால் சாப்பிட்டு வந்தால் வெளிறிய உடைந்த நகங்கள் கூட நன்கு வளரும்.

### உருளை ஸ்டார்ச் பவுடர் தயாரித்தல் மற்றும் பயன்படுத்தும் முறை

உருளைக்கிழங்கில் உள்ள ஸ்டார்ச், தோலை மிருதுவாக்கி, கூந்தலை பளபளப்பாக்கும்.

உருளைக்கிழங்கின் தோலை நீக்கி, பொடியாக நறுக்கி வெயிலில் மொறுமொறுப்பாகக் காய வைத்து, பவுடராக்கிக் கொள்ளுங்கள்.

கண்களுக்குக் கீழ் இருக்கும் கருமையைப் போக்க, 50 கிராம் உருளை ஸ்டார்ச் பவுட ருடன், 10 கிராம் பார்லி பவுடரை கலந்து கொள் ளுங்கள். இதிலிருந்து ஒரு டீஸ்பூன் எடுத்து, மசித்த வாழைப்பழம் ஒரு டீஸ்பூன் கலந்து கண்களைச் சுற்றிப் பூசுங்கள். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் கண்களுக்குக் கீழ் இருக்கும் கருமை மறையும்.

### முகத்தை 'ப்ளீச் ஆக்க

ஸ்டார்ச் பவுடர் 50 கிராமுடன், 200 கிராம் பார்லி பவுடரைக் கலந்து கொள்ளுங்கள். இதிலிருந்து 2 டீஸ்பூன் எடுத்து, பால் கலந்து முகத்தில் 'பேக்'ஆகப் போட்டுக் கழுவுங்கள். முகம், அன்று மலர்ந்த தாமரையாக ஜொலிஜொலிக்கும்.

பாதம், நகங்களில் வெடிப்பு, கழுத்து, முழங்கை, மூட்டுப் பகுதிகள் கருத்து, தோலும் மறைய ஒரு டீஸ்பூன் உருளை ஸ்டார்ச் பவுடர், அரை டீஸ்பூன் கஸ்தூரி மஞ்சள் இரண்டையும் கலந்து, அது பேஸ்ட் ஆகும் அளவுக்கு எலுமிச்சைச் சாறு சேர்த்து, பாத வெடிப்பு, கருமை படர்ந்த இடங்களில் பூசுங்கள். வெடிப்பு மறையும். கருமையும் காணாமல் போகும்.

நான்கு சீயக்காய்களை முந்தைய நாள் இரவே வெந்நீரில் ஊற வையுங்கள். மறுநாள், இந்த சீயக்காய்களுடன் 4 செம்பருத்தி இலை, 2 டீஸ்பூன் உருளை ஸ்டார்ச் பவுடரை சேர்த்து அரைத்துக் கொள்ளுங்கள். இந்த விழுதைத் தலையில் தேய்த்துக் குளியுங்கள். உடல் சூடு தணிவதுடன் தலையும் சூப்பர் சுத்தமாகி விடும்.

### கூந்தல் பளபளவென மின்ன

பூந்திக்கொட்டை, காய்ந்த செம்பருத்தி இலை, வெந்தயம், பயத்தம்பருப்பு, உருளை ஸ்டார்ச் பவுடர்.. இவற்றை தலா கால் கிலோ எடுத்து மெஷினில் கொடுத்து பவுடராக்குங்கள். வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்து இந்த பவுடரைப் போட்டு அலசுங்கள். கூந்தல் பட்டுப் போல மின்னும்..

– வி.கல்பனா
அழகுகலை நிபுணர்



நீங்கள் அழகுகலை நிபுரணரா? நீங்களும் லேடீஸ் கார்னர் பக்கத்தில் பங்குபெற
தொடர்பு கொள்ளவும்
9444264610

# கொண்டை போட்ட சாண்டா லஸ்லியா கேலிசெய்த ரசிகர்கள் முடக்கம்




பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூன்றாவது சீஸனில் அறிமுகமில்லாத பலர் மிகப் பிரபலமாக மாறினர்.

இந்நிகழ்ச்சியில் தர்ஷன் முகேன், லாஸ்லியா போன்ற பலரும் ரசிகர்களுக்கு புதுமுகமாக தான் இந்த நிகழ்ச்சியில் அறிமுகமானார்கள். ஆனால் இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் மூவருக்குமே தமிழ் ரசிகர்கள் மத்தியில் ஏகப்பட்ட பிரபலம் கிடைத்தது.

அதிலும் குறிப்பாக லாஸ்லியாவின் புகழ் கொடிகட்டி பறந்து வருகின்றது. இலங்கை தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக இருந்த இவருக்கு பிக்பாஸ் நிகழ்ச்சி மிகப்பெரிய பிரபலத்தை ஏற்படுத்திக் கொடுத்தது சொல்லப் போனால் இதே சீசனில் பங்கேற்ற முகேன் மற்றும் தர்ஷனை விட லாஸ்லியா தான் அடுத்தடுத்த படங்களில் கமிட்டாகி வருகிறார்.

அதிலும் இவர் பிக் பாஸ் நிகழ்ச்சியில் இருந்தபோதே கேஎஸ் ரவிக்குமார் இவருக்கு தமிழ் சினிமாவில் மிகப் பெரிய வாய்ப்புகள் காத் துக் கொண்டிருப்பதாக கூறியிருந்தார். அவர் சொன்னதை போலவே பிக் பாஸ்க்கு பின்னர் முதலில் ஆரி நடிக்கும் புதிய படத் தில் கமிட்டானார்.




அதன் பின்னர் ஹர்பஜன்சிங் மற்றும் அர்ஜுன் நடிக்கும் பிரண்ட்ஷிப் என்ற படத்தில் கமிட் ஆகி இருந்தார்.

ஆனால், அரியுடனான படத்திற்கு முன்பாகவே 'பிரண்ட்ஷிப்' படத்தின் படப்பிடிப்புகள் நிறை வடைந்ததால் இந்த திரைப்படம் வெளியிடப்பட்டது.



லாஸ்லியாவின் ரசிகர்கள் மிகுந்த எதிர்பார்ப்பிற்கு மத்தியில் வெளியான இந்த திரைப்படம் மாபெரும் தோல்விப் படமாக அமைந்தது ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய ஏமாற்றத்தை தந்தது.

தர்ஷன் நடிக்கும் கூகுள் குட்டப்பன் என்ற படத்தில் நாயகியாக நடித்து வருகிறார் லாஸ்லியா, இந்த படத்தின் படப்பிடிப்புகள் நிறைவடைந்த நிலையில் கூடிய விரைவில் இந்த திரைப்படம் வெளியாக இருக்கிறது.

இருப்பினும் தமிழ் சினிமாவில் அடுத்தடுத்து படத்தில் நடித்து வருகிறார் லாஸ்லியா. சமூக வலைத்தளத் தில் ஆக்டிவாக இருக்கும் இவர் அடிக்கடி போட்டோ ஷூட்களை நடத்தி அந்த புகைப்படங்களை சமூகவலைதலங்களில் வெளி யிட்டு வருவதை வாடிக்கையாக வைத்து வருகி றார்.


அந்த வகையில் இன்று கிறிஸ்துமஸ் பண்டி கையை முன்னிட்டு Santa போல சிவப்பு கவுன் அணிந்து, மண்டை மீது இரண்டு கொண்டையை போட்டுகொண்டு இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டார்.

கவர்ச்சி சாண்டாவாக போஸ கொடுத்த லாஸ்லியாவின் இந்த புகைப்படத்தை பார்த்த ரசிகர்கள் பலர் கேலி செய்து பல்வேறு விதமான கமெண்டுகளை பதிவிட்டு வந்தனர். இதனால் அடுத்து அடுத்து பதிவிட்ட புகைப்படங்களில் கமெண்ட் பகுதியை முடக்கி விட்டார் லாஸ்லியா.



# கீதா சமையல் YouTube சேனல்

# சமையலை எளிமையாக அறிய உதவும் அற்புதம்




**சமையலில் புதியவரா நீங்கள்?**
**பேச்சிலர் லைப்பில் தனியாக சமைத்து சாப்பிடுபவரா?**
**புதிய வெரைட்டி சமையலை விரும்புபவரா?**
**ஆனால் சமைக்க தெரியவில்லை என்று வருத்தப்படுகிறீர்களா?**

சமையல் என்பது மிகப்பெரிய கலை, ஒவ்வொரு உணவிலும் ஒவ்வொரு சமையல் பொருட்களை சேர்த்து சமைக்கும்போது விதவிதமான உணவுகள் கிடைக்கும், எந்த உணவில் எந்த பொருளை சேர்த்தால் என்ன சுவையில் உண வை தயாரிக்கலாம்என் பதை நன்கு அறிந்தவர் கள் கற்றுத் தேர்ந்த சமையல்கலை நிபுணர் களாவார்.

தற்போதைய காலத்தில் ஒட்டல் உணவை விரும்பி சாப்பிடும் கலாச்சாரத் தின் உச்சத் தை பலர் கண்டுள்ளனர், சுவைக்காக சேர்க்கப்படும் பல்வேறு கலவை களால், அந்த உணவேஒரு கட்டத்தில் விஷமாக மாறுவதை யும் நன்கு அறிந்தவர்கள் தற் போது சுயமாக கஞ்சி வைத்தாவது குடித்து பசி ஆறினால் போதும் என்ற மனநிலைக்கு வந்து சுயமாக சமைக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுபோன்ற நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்ய காத்திருக்கிறது **கீதா சமையல் யூ-டியூப் சேனல்,** இந்த சேனலில் புதிய புதிய சமையலை மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பொறுமையாகவும் விளக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான சமையல் குறிப்புகளையும், அவற்றை செய்யும் வழிமுறைகளையும் தெளிவான வீடியோமூலம் தெரிந்து கொண்டு சமைக்கலாம்.

நான்வெஜ், வெஜ், மூலிகை, ஸ்வீட், காரம் என பல்வேறு உணவுகளின் ரெசிபிக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. தேங்காய் எண்ணெய்யில் பிரியாணி, நாட்டுக் கோழி பிரியாணி, இரால் பிரியாணி, மீல்மேக்கன் பிரியாணி, மட்டன் பிரியாணி போன்ற அசைவ பிரியாணிகளும், மழைகாலங்கள், பனிக்காலத்திற்கு ஏற்படும் உடல் பிரச்சனைகளை தீர்க்கும் நாட் டுக்கோழி ரசம் போன்ற உணவுகளின் சமையல்முறை களை தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சைவ உணவில் மூலிகை ரசம், புடலங்காய் உருண்டை, சில்லி கத்தரிக்காய், கொள்ளு பிரியாணி போன்ற சூப்பர் உணவுகளை சுவையாக தயாரிக்கும் முறையை மிக அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்த சேனலை பார்த்து நீங்களும் பயன் பெறலாம், தெரியாத உணவை தெரிந்து கொள்ளுங்கள்.

# உயிர் காக்கும் சாரதா சங்கர் அடர் மூலிகை வனம் கோவில்



ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் வாழ்ந்து பல்வேறு தெய்வீக மூலிகைகளை சேகரித்து பொதுமக்கள் சேவையாக இயற்கையாக பொதுமக்களுக்கு சித்தமருத்துவம் செய்து வந்த தம்பதியான சங்கர் சாரதா இவருடைய மகன் அரசு பதிவு பெற்றசித்த மருத்துவர் டாக்டர் வரதராஜன் உயிர் காக்கும் மூலிகைகள் மூலம் பல அரிய நோய்களுக்கு குறைந்த செலவில் மூலிகை மருந்துகளைதயார்செய்து அனுப்பி வைக்கிறார்.

மாதந்தோரும் சென்னை, மதுரை, திருச்சி, ஆகிய பெரிய நகரங்களில் பொது மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைப்பதற்க்கு கபசுர குடிநீர் மற்றும் மருந்து பாக்கெட்களை இலவசமா வழங்கி வருகிறார் பெற்றோர் கள் ஆசைப்படி வைகை ஆற்றுக்கரையில் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ள கச்சாத்த நல்லூரில் உயிர்காக்கும் சாரதா சங்கர் அடர் மூலிகை வனத்தை உருவாக்கி உள்ளார்.

இதில் சிவ அம்சமாக கருதப்படும் மகா வில்வம், வன்னி மரம், வில்வம் என சுமார் 25,000 க்கும் மேற்பட்ட உயிர் காக்கும் மூலிகை மரங் களை

பாதுகாத்து வளர்த்து வருகிறார் சித்த மருத்துவரான டாக்டர் வரதராஜன் ஆன்மீக பணிகளை செய்து வருகிறார் பரமகுடியில் அபய வரத ஆஞ்சநேயர் கோவிலை கட்டி கும்பபாபிஷேகம் செய்துள்ளார் அடர் மூலிகை வனத்தில் பக்தர்கள் மூலிகை ஆர்வலர்கள் சித்த மருத்துவ பயிற்றுனர்கள் சாமி தரிசனம் செய்ய நர்த்தன விநாயகர், மகா சித்தர் அகத்தியர், ஔவையார் பாட்டி ஆகியோர்க்கு பீடமும் அஷ்ட லெட்சுமிகளுக்கும் தனிக்கோவில், விநாயகர், அகத்தியர், விவேகானந்தர், வள்ளளார் ஆகியோர்க்கும் தனி தனி கோவிலாக கட்டி முடிக்கப்பட்டு ஏராளமானோர் சாமி தரிசனம் செய்து செல்லுகின்றனர்.

தமிழகத்தில் தலை சிறந்த அரசு பதிவு பெற்று பொன் விழா கண்ட சோல மலை இந்தியன் டிரக்ஸ் நிறுவனத்தை டாக்டர் வரதராஜன் குடும்பத்தினர் மிகவும் குறைந்த விலையில் சித்த மருந்துகளை வழங்கி வருகின்றனர் அடர் வளர் மூலிகை வனத் தை உருவாக்கிய வரதராஜன் சித்த மருந்துகள் தயாரிப்பதில் திறமை பெற்றவர் இவரை பாராட்டி செவாலியர் விருதும் முன்று முறை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டரிடம் சான்றிதழ்மும் கேடயமும் பெற்றுள்ளார்.

தமிழகத்தில் ரோசய்யா ஆளுநராக இருந்த போது பாராட்டி கௌரவித்து உள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு குறிச்சி வழிவிடு பெரியநாச்சி









அழகுராஜா

அம்மன் காசி விஸ்வநாதர் கோவிலில் சனி பிரதோசத்தின் போது ஆயிரம் பக்தர்களுக்கு கபசுர குடிநீரை வழங்கினார்.

கடந்த ஆண்டுகளில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களில் இலவசமாக மக்களுக்கு இயற்கையாக தயார் செய்யப்பட்ட கபசுர குடிநீர் மற்றும் மூலிகை மருந்து பாக்கெட்கள் வழங்கி சேவை செய்து வருகிறார் தற்போது வயிற்றில் ஏற்படும் பல தொல்லைகள் நீங்க சோலமலை கேஸ் டோன் லேகியமாக தயார் செய்துள்ளார். இந்த மருந்து மூட்டு வலி, முழங்கால் வலி, குதிவாத வலி சகல விதமான கேஸ் டிரபுள் நோய்களையும் சரி செய்கிறது அடர் மூலிகை வனத்தை பார்வையிடும் மூலிகை ஆர்வலர்கள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு மூலிகை மற்றும் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கியும் மர வளர்ப்பை ஊக்குவித்து வருகிறார் மானாமதுரை பரமக்குடி சாலையில் உயிர் காக்கும் சாரதா சங்கர் அடர் மூலிகை வனக்கோவில் உள்ளது இந்த தெய்விக மூலிகைகளையும் அங்குள்ள கோவிலில் சாமி தரிசனம் செய்யவும் கிழ்கண்ட செல் நம்பர் 9842045587 தொடர்பு கொண்டு பயன் அடையலாம்.

– அழகுராஜா 9994162182



# சைக்கிள் ஓட்டினால் உலக பொருளாதாரம் சரிவடையும்

உண்மையா?

தினமும் சைக்கிள் ஓட்டுபவனால் இந்தியா மட்டுமல்ல உலக பொருளாதாரமே சீரழியும்...

ஆச்சரியமா இருக்கா?.....

சைக்கிள் ஓட்டி பழக்கப்பட்டா அவன் கார் வாங்க மாட்டான்...

அதற்காக கடன் வாங்கவும் மாட்டான்...

வட்டியும் கட்ட மாட்டான்...

பேங்க் பைனான்ஸ் கம்பெனிக்கு சல்லி பைசா கிடைக்காது...

கார் இன்சூரன்ஸ் பண்றதுக்கு வர மாட்டான்...

இந்த பெட்ரோல் டீசல்..... ம்ஹூம்... வாய்ப்பே இல்ல...

இவனால அமெரிக்கா, சவுதி அரேபியாவுக்கும் கூட எந்த பயனும் இல்ல...

சர்வீஸ் ஸ்பேர் பார்ட்ஸ் எதற்கும் இவன் செலவு செய்யறது இல்ல...

பார்க்கிங் கட்டணம்னு பெருசா எங்கேயும் செலுத்த மாட்டான்...

இதெல்லாம் போய்த் தொலையட்டும்னு விட்டா.

சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு சுகர் வராது...

இதய நோய் வராது...

குண்டாகவும் மாட்டான்...

ஆஸ்பத்திரி, டாக்டர், மருந்து கடை இதெல்லாம் தேவையே இல்லை...

உலக பொருளாதாரம் வளர இவன் எதுவும் செய்ய மாட்டான்...

அதே சமயம் ஒரே ஒரு பீட்ஸா, பர்க்கர், துரித உணவகங்கள், சுவையான உணவகங்கள் என்று திறந்தால், அதில் தொடர்ந்து சாப்பிடுபவனுக்கு மேற்கண்ட நோய்கள் கண்டிப்பா வரும்.

இதன்மூலம் ஊர்ல உள்ள எல்லா டாக்டரையும் வாழ வைக்கும்...

10 இதய டாக்டர்...

10 பல் டாக்டர்...

10 டயட்டீசியன்...

இன்னும் ஒரு 50 மெடிக்கல் ஷாப்க்கு தேவையான பொருளாதாரம் அதனால கிடைக்கும்...

உலக பொருளாதாரம் சரியனும்னு முடிவெடுக்கனுமா, அல்லது நாம் ஆரோக்கியமாக வாழணும்னு முடிவெடுக்கணுமா?

இந்த காலகட்டத்தில் சொகுசான வாழ்வு வாழ வாய்ப்பு இருந்தாலும், ஒருசிலதை நாம கடைபிடித்தால்தான் உலக வாழ்க்கையை நாம இன்பமாக வாழமுடியும்.

உலக பொருளாதாரமே சரிந்தாலும் பரவாயில்லை, வாழ்க்கையை இன்பமாக வாழ நாம் சைக்கிளை பயன்படுத்துவோம்.



# thiraimalar.com திரைமலர் .காம்

## இணையதளத்தில்
## சினிமா, மினிமா செய்திகளையும்,
## இ–புத்தகத்தையும்
## படித்து மகிழுங்கள்















# துபையின் கோல்டன் விசா பெறும் முதல் தமிழ் நடிகர்



ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கோல்டன் விசா என்பது நீண்டகால குடியிருப்பு விசா. இது 5 முதல் 10 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தானாகவே புதுப்பிக்கப்படும் வசதியையும் கொண்டதாகவும் உள்ளது. அதோடு பல்வேறு துறைகளை சேர்ந்த சாதனையாளர்கள், தொழில் வல்லுனர்கள் மற்றும் அரிய திறன்களை கொண்டவர்களுக்கு இந்த கோல்டன் விசா வழங்கப்படுகிறது. அந்த வகையில் இந்திய நடிகர்கள் பலருக்கு ஐக்கிய அமீரகத்தின் கோல்டன் விசா வழங்கப்பட்டு உள்ளது.





இந்தி நடிகர்கள் சஞ்சய்தத், ஷாருக்கான், மலையாள நடிகர்கள் மம்முட்டி, மோகன்லால், பிருதிவிராஜ், துல்கர் சல்மான் ஆகியோர் கோல்டன் விசா பெற்றுள்ளனர். சமீபத்தில் இந்தி நடிகை ஊர்வசி ரவுடாலா, நடிகை மீரா ஜாஸ்மின் ஆகியோருக்கும் கோல்டன் விசா வழங்கப் பட்டது.

அதுமட்டுமின்றி கடந்த மாதம் ஐக்கிய அமீரகத்தின் கோல்டன் விசாவை பெற்ற முதல் தமிழ் நடிகை என்ற பெருமையை நடிகை திரிஷா பெற்றார்.

இந்த நிலையில் ஐக்கிய அரபு அமீரக அரசு இந்த விருதை இயக்குநரும் நடிகருமான ஆர்.பார்த்திபனுக்கும் வழங்கியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் கோல்டன் விசா பெற்ற முதல் தமிழ் நடிகர் என்ற பெருமையை பார்த்திபன் தட்டிச் சென்றுள்ள தகவல் தற்போது சோஷியல் மீடியாவில் வைரலாக பரவி வருகிறது.

தமிழ் சினிமா உலகில் மிக பிரபலமான நடிகராக திகழ்பவர் பார்த்திபன். இவர் திரைப்பட நடிகர் மட்டுமில்லாமல் மிக பிரபலமான இயக்குனரும் ஆவார். இவருடைய இயக்கத்தில் வெளிவந்த படங்கள் எல்லாமே மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

இந்நிலையில் ஐக்கிய அரபு அமீரகத்தின் கோல்டன் விசா பெறும் முதல் தமிழ் நடிகர் என்ற பெருமையை இயக்குனர் பார்த்திபனுக்கு கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பார்த்திபன் தனது ட்விட்டர் பக்கத்தில் "எனக்கு கோல்டன் விசா வழங்கப்பட்டதற்கு ரொம்ப சந்தோஷப்படுகிறேன். அரசாங்கத்திற்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகள்.

இந்த சிறப்புரிமைக்கு தகுதியானவன் என்று என்னைக் கருதிய அரசுக்கும் அன்புக்கும் நன்றி" என்று குறிப்பிட்டுள்ளார்.





கணவன் மனைவி இருவரும்சேர்ந்து சினிமாத்துறையில் கலக்குகின்றனர். டி.சத்தியம் அவரது மனைவியும் பல்வேறு திரைப்படங்களில் சிறு சிறுவேடங்களில் நடித்ததுடன் பல்வேறு குறும்படங்களில் வெற்றிகரமாக நடித்து வருகின்றனர்,
இவர்களின் தொலைபேசி எண் 938194618



காஸ்டிங் கேள் ஆர்ட்டிஸ்ட்
தேவைக்கு தொடர்பு கொள்ளவும்,
பல்வேறு குறும்படங்களில் நடித்த அனுபவம் உள்ளது
இவரை தொடர்பு கொள்ள
தொலைபேசி எண் 9789564323




# பெரிய திரையில் காதாநாயகியாகும் சின்னத்திரை ரச்சிதா



பிரிவோம் சந்திப்போம் தொடரின் மூலம் அறிமுகமானவர் ரச்சிதா. இதே தொடரில் தனக்கு ஜோடியாக நடித்த தினேஷ் என்பவரை திருமணம் செய்துகொண்டார். சரவணன் மீனாட்சி தொடரின் மூலம் ரசிகர்களிடம் மிகவும் பிரபலமடைந்த இவர்.

ஒரு சிறிய இடைவேளைக்கு பிறகு தனது கணவர் தினேஷுடன் இணைந்து ரச்சிதா நாச்சியார்புரம் என்ற தொடரில் நடித்தார். ஜீ தமிழில் ஒளிபரப்பான இந்த தொடர் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. கொரோனா பாதிப்பை தொடர்ந்து ஒளிபரப்பான இந்த தொடர் சில காரணங்களால் விரைவில் முடிவுக்கு வந்தது

விஜய் டிவியில் ஹீரோயினாக நாம் இருவர் நமக்கு இருவர் தொடரில் நடித்து வந்தார் ரச்சிதா. திடீரென இத் தொடரில் இருந்து விலகுவதாக சமீபத்தில் தெரிவித்தார்.

நடிகரும்,இயக்குனருமான குருப்ரசாத் நடிக்கும் கன்னட படத்தில் ரச்சிதா ஹீரோயினாக அறிமுகமாகிறார். இந்த படத்தின் ஷூட்டிங்கில் பங்கேற்று வந்தார் ரச்சிதா.





அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்

SML Graphics செல்: +91-9444228203

# பொங்கலோ பொங்கல்

உள்ளத்திற்கும் இல்லத்திற்கும்
ஒரு திருநாளாம் அது
போகி பண்டிகையாம்.!
உதிப்பவனுக்கும் ஒரு
திருநாளாம் அது
தைபொங்கலாம்.!
உழவுக்கு உதவியவனுக்கும்
ஒரு திருநாளாம் அது
மாட்டுபொங்கலாம்.!
உழவனுக்கும் ஒரு
திருநாளாம் அது
உழவர் திருநாளாம்!!

மண் பானையோடு...
மங்களம் உண்டாகட்டும்.!
மஞ்சள் கொத்தொடு...
மனசு நிறையட்டும்.!
மாவிலை தோரணத்தோடு...
மகிழ்ச்சி பொங்கட்டும்.!
இஞ்சி துண்டோடு...
இன்பம்வந்து சேரட்டும்.!
பச்சரிசி பாலோடு...
பாசம்வந்து பொங்கட்டும்.!
அடிக்கரும்போடு...
அனைவருடைய வாழ்க்கையும்
தித்திக்கட்டும்.!!

விதையிட்ட விவசாயிக்குபெரும்
விளைச்சல்வந்து சேரட்டும்.!
ஜல்லிக்கட்டு காளையோடு
மல்லுகட்டும் மைனர்களின்
வீரமிங்கே பேசட்டும்.!
மண்ணோடு ஒத்திகை
பார்த்துவிட்டுமாட்டு
சாணத்தோடு வாசல்மொழுகி
அரிசி மாக்கோலமிட்டு
அரசிபோல எழும்...

எங்கள்வீட்டு பெண்களெல்லாம்...
'புலியை.. முறத்தால் அடித்த
பரம்பரைடா நாங்கள்'என்று
பெருமை கொள்ளட்டும்.!
மஞ்சதண்ணி சொம்போடு..
மச்சினிகளும் முறைபெண்களும்...
மாமனையும் மச்சானையும்
விரட்டி விரட்டி விளையாடட்டும்.!
தீஞ்சபயலுக்கு...
தீபாவளி வந்தா
எனக்கென்ன!?
காஞ்சபயலுக்கு...
கார்த்திகை வந்தா
எனக்கென்ன!?
கண்ணாட்டி(செல்லமாக)
பொங்க வந்தா..
கட்டுகட்டா புல்லு திம்பேன்(சாப்பிடுதல்)னு
மாடு சொல்லுமாம்' என்று
பொக்கைவாய் கிழவியெல்லாம்
பழமொழி பேசட்டும்..!
எட்டுதிசைக்கும் வாழும்
தமிழும், தமிழர்களின்
கலாச்சாரமும்..
பெருகட்டும்.! சிறக்கட்டும்.!!
"பொங்கலோ பொங்கல்"என்று
ஒற்றுமையுடன் கூறட்டும்.!!!

இப்படிக்கு
கவிஞர் சு. மோகனா Msc.,
சென்னை., Cell: 7639951182






# திரைவிமர்சனம்

தங்கதுரை (சமுத்திரக்கனி) ஒரு போலீஸ்ஸ்டேசனில் ஒரு ரைட்டர். இன்னும் சில மாதங்களில் ரிட்டையர் ஆக போகிற ஒரு கேரக்டர்.அப்படியே பாடிலாங்குவேஜில் அதை உணர்ந்து நடித்திருக்கிறார்.

இவர் ரெண்டு பொண்டாட்டி போலீஸ்காரர். தான் உண்டு தன் வேலையுண்டு என இருப்பவர். ரிட்டையர் ஆகும் வரையில் இதே பாணியை கடைப்பிடிக்கிறார்.

அதே சமயம் காவலர்களுக்கென ஒரு யூனியன் வேண்டும் என பலமுறை கோர்ட் படிகளில் ஏறி நிற்கிறார். இதனால் இவருக்கு சக காவலர்களின் ஆதரவு உண்டு.

ஆனால் இவரின் நடவடிக்கையால் சிலர்உயரதிகாரிகள் இவரை திட்டி தீர்க்கின்றனர். அதன் உச்சக்கட்டமாக போலீஸ் போஸ் வெங்கட்இவரை அடித்து சென்னைக்கு பணி மாற்றம் செய்துவிடுகிறார்.

சென்னை போலீஸ் ஸ்டேசனில் இவருக்கு ஒரு பொய் வழக்கு குற்றவாளியான ஹரியை பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதாவது சிறைச்சாலையில் இல்லாமல் ஒரு லாட்ஜில் குற்றவாளியை தங்க வைக்கிறார் டெபூடி கமிஷ்னர்.

இதனை அறிந்துக் கொள்ளும் சமுத்திரக்கனி ஸ்டேசனில் பணிபுரியும் ஒரு திருடன் (ஆன்டனி) உதவியுடன் ஹரியை காப்பாற்ற நினைக்கிறார்.

ஹரி மீது போலீஸ் பொய் வழக்கு போட என்ன காரணம்..? ஹரிக்கு எப்படி உதவினார் ரைட்டர் சமுத்திரக்கனி. இறுதியில் என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை.

ரெண்டு பொண்டாட்டிகாரர்.. லேட்டாக குழந்தை பிறந்தல் தினமும் இரவில் சரக்கு, போனில் பொண்டாட்டி தொல்லை.. தொப்பை தள்ளிய போலீஸ்.. படிக்கும்போது கண்ணாடி.. என தன் நடிப்பில் அடுத்த பரிமாணத்தை காட்டியிருக்கிறார்.

இனியா சில காட்சிகளிலே வந்தாலும் இளமை.. இனிமை என காட்டி நடித்திருக்கிறார்.

பொய் குற்றவாளியாக ஹரி கிருஷ்ணன்.. என் கௌண்டரில் இவரை போலீஸ் நிறுத்தும்போது

இவர் கதறும் நடிப்பு அக்மார்க் உயிர்பிச்சை கேட்கும் தருணம்.. (மெட்ராஸ் படத்தில் ஜானியாக நடித்தவர் தான் இவர்)

ஹரியின் அண்ணனாக திருடா திருடி பட இயக்குனர் சுப்ரமணிய சிவா நடித்திருக்கிறார். தன் தம்பி மேல் தவறு இல்லை என தெரிந்தாலும் அதிகாரவர்க்கத்திடம் இவர் காட்டும் பவ்யம் சாமானிய மனிதர்களை கண்முன் நிறுத்துகிறது.

திருந்திய குற்றவாளி, போலீஸ் ஸ்டேசனில் உதவி செய்யும் ஆன்டனி.. அமர்க்களப்படுத்தியிருக்கிறார். (இவர் மேற்கு தொடர்ச்சி மலை படத்தின் நாயகன்).

உங்ககிட்ட வேலை செய்றதுக்கு ஜெயில்ல இருந்திருக்கலாம். என்பதாகட்டும்.. போலீஸ்ல நல்லவங்க இருக்காங்க ஆனா இப்போ அவங்கல்லாம் இறந்துட்டாங்க என இவர் பேசும் வசனங்கள் கைத்தட்ட வைக்கிறது.

சமுத்திரக்கனியின் ரெண்டு பொண்டாட்டிகளும் கொடுக்கபட்ட கேரக்டரில் கச்சிதம். இன்ஸ்பெக்டராக கவிதா பாரதி.. தினமும் போலீஸ் ஸ்டேசனுக்கு லேட்டாக வந்து வாங்கி கட்டிக் கொள்வது ரசிக்க வைக்கிறது.

96 படப்புகழ் கோவிந்த வசந்தா இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார். தேவைக்கேற்ப பின்னனி இசையை கொடுத்து பாடல்களையும் ரசிக்க வைத்துள்ளார்.

பிரதீப் காளிராஜாவின் ஒளிப்பதிவு அருமை.

ஒரு போலீஸ் ஸ்டேசன் மற்றும் ஜெயில் எப்படி இருக்கும் என்பதை கலை இயக்குனர் ராஜா அழகாக வடிவமைத்துள்ளார். மணிகண்டன்சிவகுமாரின் எடிட்டிங் கச்சிதம். படத்தின் கதைக்கேற்ப காட்சிகள் இருப்பதால் எங்கும் வெட்டிவிடவில்லை.

டிவிஎஸ் 50 காணவில்லை என புகார் அளித்தவருக்கு வேறு ஒரு பைக் கொடுப்பது.. 6 பவுன் நகை காணவில்லை என புகார்




அளித்தவருக்கு 3 பவுன் நகை கொடுத்து அவர்களின் வழக்குகளை வாபஸ் வாங்க வைப்பது என போலீஸ் ஸ்டேசனின் பொய்களை தோலுரித்துள்ளார் இயக்குனர்.

க்ளைமாக்ஸ் சமயத்தின் 10 நிமிட காட்சிகள் நம்மை சீட் நுனியில் உட்கார வைத்து கைத்தட்ட வைத்தும் விட்டார் டைரக்டர்.

ரஞ்சித்திடம் உதவி இயக்குநராக பணியாற்றிய பிராங்க்ளின் ஜேக்கப் இந்த படத்தை இயக்கி யுள்ளார். ஒரு போலீஸ் ரைட்டரின் வாழ்க்கையை யதார்த்தமாக பதிவு செய்துள்ளனர்.

அதிதி ஆனந்த், அஸ்வினி சவுத்ரி, யு எம் ராவ் உள்ளிட்டோருடன் இணைந்து படத்தை தயாரித்துள்ளார் தயாரிப்பாளர் பா.இரஞ்சித்.





# அஞ்சலி என்னை அவாய்ட் பண்றா? ஃபீலிங்கில் பிளாக்பாண்டி

இயக்குனர் ராம் இயக்கிய முதல் திரைப்படமான ‘கற்றது தமிழ்’ திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை அஞ்சலி. முதல் படத்திலேயே அழகான நடிப்பை வழங்கி ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தார்.

கலகலப்பு, அங்காடி தெரு, தூங்கா நகரம், மங்காத்தா, எங்கேயும் எப்போதும், இறைவி, தரமணி, பேரன்பு ஆகிய படங்கள் அவரின் நடிப்பில் ரசிகர்களை கவர்ந்த திரைப்படங்களாகும். தமிழ் மட்டுமில்லாமல் ஏராளமான தெலுங்கு படங்களிலும் அவர் நடித்துள்ளார்.

இந்நிலையில், அங்காடித்தெரு படத்தில் அவருடன் நடித்த நடிகர் பிளாக் பாண்டி சமீபத்தில் அளித்துள்ள ஒரு பேட்டியில் ‘அஞ்சலியும் நானும் அங்காடித்தெரு படம் நடிப்பதற்கு முன்பே நல்ல நண்பர்கள். இருவரும் சேர்ந்துதான் நடன பயிற்சி எடுத்தோம்.

ஆனால், அவரிடம் பேசி செல்போனை அழைத்தால் அவரின் மேனேஜர்தான் பேசுகிறார்.

சமீபத்தில் மலேசியா சென்ற போதுதான் அவரைபார்த்து ‘ஏண்டி உனக்கு போன் பன்னா மேனேஜரை விட்டுத் தான் பேச சொல்வியா?’ எனக்கேட்டேன். உடனே, அவரின் செல்போன் எண்ணை கொடுத்து அதில் அழைக்குமாறு கூறினார். அந்த எண்ணில் பல முறை அழைத்தும் அந்த போனை அவர் எடுக்கவில்லை.

என்னை அவர் அவாய்ட்செய்வதை புரிந்துகொண்டேன்.

வளர்ந்து ஒரு இடத்திற்குசென்றதும் இந்த மாதிரி செய்ய வேணும் என எப்படி தோணுகிறதோ தெரியவில்லை’ என ஃபீலிங்காக பேசியுள்ளார்.





சினிமா துறையில் ஆர்வமுள்ளவரா நீங்கள்...
நிருபராக பணியாற்ற விரும்புகிறீர்களா?

சினிமா, சின்னத்திரை, லைப்ஸ்டைல்,
லேடீஸ் ஸ்பெஷல் போன்ற பல்துறை அனுபம்
மிக்க நபர்கள் தொடர்பு கொள்ளவும்.

9444264610/ 9841807572

# சசிக்குமாரின் வித்தியாச டீசர்...



தமிழ் சினிமாவில் இயக்குநராக அறிமுகமான சசிகுமார் நாடோடி கள், சுந்தரபாண்டியன், தாரை தப்பட்டை உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான 'எம்.ஜி.ஆர் மகன்' மற்றும் 'ராஜவம்சம்' திரைப்படங்கள் கலவையான விமர்சனங் களை பெற்றது.

இதனைத்தொடர்ந்து இயக்குநர் சத்யசிவா இயக்கும் 'காமன் மேன்' படத்தில் சசிகுமார் நடிக்கிறார். கடந்த 2012 ஆம் ஆண்டு இயக்குநர் சத்யசிவா இயக்கத்தில் வெளியான 'கழுகு' திரைப்படம் பெரும் வெற்றி பெற்றது. இப்படத்தின் மூலம் அனைவரின் கவனத்தை ஈர்த்த இவர் 'கழுகு 2', 'சவாலே சமாளி' ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.

இதையடுத்து தற்போது சசிகுமார் நடிக்கும் படத்தை இயக்குகிறார். செந்தூர் பிலிம் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மற்றும் டைட்டில் டீசர் 23.12.2021 வெளியானது. வித்தியாசமான கதைக்களத்தில் ஆக்சன் த்ரில்லர் காட்சிகள் நிறைந்த இந்த டீசர் தற்போது அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகிறது. 'காமன் மேன்' படத்தின் டைட்டில் டீசர் யூடியூப் தளத்தில்,6 லட்சம் பார்வையாளர்களை கடந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.



# பிரபுதேவாவும் பூதமும்

மாயாஜாலக் கதை களத்தில் உருவாகிவரும் மை டியர் பூதம் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் கடந்த வாரம் வெளியாகி வைரலான நிலையில் இப்பொழுது டிரைலர் ரிலீஸ் குறித்த முக்கிய அப்டேட் வெளியாகியுள்ளது.

நடன இயக்குனராக இருந்து பின்பு இயக்குனர் அவதாரம் எடுத்து பல வெற்றி படங்களை கொடுத்த பிரபுதேவா இப்பொழுது நடிகராக பட்டையைக் கிளப்பிக் கொண்டு உள்ளார். அந்த வகையில் ஹீரோவாக நடித்த திரைப்படங்கள் அனைத்தும் மாபெரும் வெற்றி பெற தொடர்ந்து வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். அந்த வகையில் இப்போது இயக்குனர் என் ராகவன் கூட்டணியில் புதிய திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். அதற்கு மை டியர் பூதம் என டைட்டில் வைக்கப்பட்டுள்ளது.



மஞ்சப்பை, கடம்பன் ஆகிய படங்களை இயக்கிய ஏன் ராகவன் இயக்கத்தில் உருவாகிவரும் மை டியர் பூதம் திரைப்படம் முழுக்க முழுக்க ஃபேண்டஸி கதைகளில் உருவாகி வருகிறது. பிரபுதேவாவுக்கு ஜோடியாக ரம்யா நம்பீசன் நடிக்கிறார். அபிஷேக் பிலிம்ஸ் சார்பில் ரமேஷ் பி பிள்ளை தயாரிப்பில் உருவாகி வரும் இந்த படத்திற்கு டி இமான் இசை அமைக்கிறார். எஸ்.கே.செல்வகுமார் ஒளிப்பதிவாளராக பணியாற்றியு

**Owned, Published by N.Geetharani. Design by SML GRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : N.Geetharani, Cell: 9444264610.**
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com

# சினி துறையில் சாதனை செய்ய விரும்புகிறீர்களா?

உங்களைப்பற்றிய விவரங்களை
எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்
உங்கள் ஆர்வத்தையும் திறமையும்
திரைமலர்.காம் இணையதளம் மற்றும்
இ-புக் வாயிலாக வெளியிடுகிறோம்.
சினிமாவில் நீங்கள் விரும்பும்
துறையைப் பற்றி விரிவாக
எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்...

## 9444264610

## 9841807572

